ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2145/49 - 2019 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.17
*2145/49 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்*

*2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகைகள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை IV இன் தலைப்பு ஊ இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதலுடன் தொடர்புடைய தேவைப்பாடுகள் நீக்கப்படுவதுடன் பின்வருவனவற்றின் மூலம் பிரதியீடு செய்யப்படுகின்றது.*

1. *பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் பொருட்களின் ஏற்றுமதிக்காக பெறப்பட்ட கொடுப்பனவுகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.*

2. *பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் கொடுப்பனவுகள் பெறப்பட்டது என்பது தொடர்பான ஆவணச் சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகருக்கோ சமர்ப்பித்தல் வேண்டும்.*

3. *இத்தேவைப்பாடுகள் தொடர்பில் பொருட்களின் ஏற்றுமதியாளர்களினது இணங்குவிப்பினைக் கண்காணிப்பதற்குப் பொருத்தமான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் இத்தலைப்பின் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் ஏதேனும் இணங்காமைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*கொழும்பு 01,*
*2019, ஒற்றோபர் 17.*

*11-155*

1A-PG 4712 — 542 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*